# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 சனவரி

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

*பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பல பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் குறிப்பிட்ட குறைபாடுகள் இருந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. விடைகளை மதிப்பீடு செய்த பரீட்சகர்களின் அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன:*

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – இந்த வினா 40 புள்ளிகளுக்காக 20 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

**(கட்டாய வினா)**

இந்தப் பகுதி மொத்தப் புள்ளிகளில் 40% இனைத் எடுத்துக்கொண்டு ஒட்டுமொத்த பாடத்திட்டத்தின் பரந்த எல்லையினை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இது பாடத்திட்டத்தின் கனத்தின் அடிப்படையில் அடிப்படைப் பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை உள்ளடக்கியுள்ளது. தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்வதற்கு வினா இல. **1.1** தொடக்கம் **1.10** வரையில் இலகுவான வினாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. தரப்பட்ட கூற்றுக்கள் சரியானவையா அல்லது தவறானவையா என்பதைக் குறிப்பிடுவதற்காக வினா இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து இடைவெளியை நிரப்புவதற்காக வினா இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகளை வழங்கியிருந்தனர் என்பதை அவர்கள் பெற்ற உயர் புள்ளிகள் காட்டிநிற்கின்றன. எவ்வாறாயினும் சில வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் சில குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

அத்தகைய சில வழுக்கள் / பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.1** மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கான வளங்களின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு அரிதான தன்மை எனப்படுகிறது. இங்கு பொருளியலின் அடிப்படையான விடயம் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்து 2 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் பிழையான விடையான சந்தர்ப்பச் செலவினை விடையாகத் தெரிவுசெய்திருந்த சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

**1.2** அதிகளவான பரீட்சார்த்திகள் சமபயன் வளையியின் சகல பண்பியல்புகளையும் அடையாளங்கண்டு சரியான விடையினை வழங்கியிருந்த போதிலும், இது பற்றி அறிந்திராத சிலர் பிழையான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.3** நிறைபோட்டியின் ஒரு பண்பியல்பாக அமையாதது விடை இல. (4) இல் தரப்பட்ட ‘குறுங்கால ஓட்டத்தில் சாதாரண இலாபங்களை மாத்திரம் உழைத்தல் என்பது காணப்பட்ட போதிலும் பரீட்சார்த்திகளால் மற்றைய பிழையான விடைகளும் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. நிறைபோட்டி யிலுள்ள ஓர் நிறுவனம் குறுங்கால ஓட்டச் சமநிலையில் பொதுநிலை கடந்த இலாபங்களை (Supernormal) உழைக்கிறது என்பதுடன் நீண்டகால ஓட்டத்தில் மாத்திரம் சாதாரண இலாபங்களை உழைக்கிறது என்பதைப் பரீட்சார்த்திகள் அறிந்துவைத்திருத்தல் வேண்டும்.

**1.4** இந்த வினா உற்பத்தி மற்றும் கிரயக் கோட்பாடுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. நீண்டகால ஓட்டத்தில் சகல காரணிகளும் மாறும் காரணிகளாகவே வரும் என்பதையும் எந்தவொரு காரணியும் நிலையான காரணியாகக் கருதப்படுவதில்லை என்பதையும் அறிந்திராததன் காரணமாக அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடையினை அளிக்க முடியவில்லை. இது அவர்களது கோட்பாட்டுரீதியான அறிவு குறைவாக இருப்பதையே காட்டுகிறது.

**1.5** இவ்வினாவுக்கு, அதிகளவான பரீட்சார்த்திகள் விரிந்த பண நிரம்பல் என்ற சரியான விடையைக் குறிப்பிட்டிருந்த அதேவேளை சிலர் பிழையான விடையான விடை இல. 1 இல் தரப்பட்ட நாணயத் தளம் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். ஒடுங்கிய பண நிரம்பலின் தொகையும் பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்படுகின்ற கால மற்றும் சேமிப்பு வைப்புகளும் விரிந்த பண நிரம்பல் என அழைக்கப்படுகின்றது என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**1.6** பெரும்பாலான பரீட்சார்த்திகள், நாணய விநியோகமும் முகாமையும் வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடு அல்ல என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் வினாவில் தொழிற்பாடு அல்லாதது எது எனக் கேட்கப்பட்டதை தொழிற்பாடு எது எனக் கேட்கப்பட்டதாக பிழையாக விளங்கிக்கொண்டு தவறான விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர்.

**1.7** கிரய நோக்கம் என்பது பண மற்றும் விலை மட்டக் கோட்பாட்டின் கீழ் பணத்திற்கான கேள்விக்கான ஓர் நோக்கம் அல்ல என்பதை பெரும்பாலான பரீட்சார்த்திகள் தெரிந்துகொண்டிருந்ததால் சரியான விடையினை அளித்திருந்தனர். இது அந்தத் தலைப்பு தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் சரியான புரிந்துணர்வு காணப்படுவதைக் குறிக்கிறது.

**1.8** சில பரீட்சார்த்திகள் வினா பற்றிய சரியான புரிந்துணர்வு இன்மையால் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக்கான அளவுரீதியான கட்டுப்பாட்டின் கருவிகளாக விடை இல. (1) மற்றும் (4) இல் தரப்பட்ட விடைகளைத் தெரிவுசெய்திருந்தமையைக் காணக்கூடியதாக இருக்கிறது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் விடை இல. (3) இல் தரப்பட்ட சரியான விடையான வங்கி வீதக் கொள்கையினைத் தெரிவுசெய்திருந்தனர்.

**1.9** சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு பிழையான விடைகளான விடை இல. (1) மற்றும் (4) இனைத் தெரிவுசெய்திருந்தனர். இது இப்பாடப்பரப்பில் போதியளவு அறிவு காணப்படவில்லை என்பதையே காட்டுகிறது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையான விடை இல. (2) இல் தரப்பட்ட திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை என்பதைத் தெரிவுசெய்திருந்தனர்.

**1.10** இது 2016 ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கைக்கு இணங்க இலங்கையின் தனிநபர் வருமானத்துடன் தொடர்புடைய நடைமுறை அறிவைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாவாக இருந்த போதிலும், மத்திய வங்கி அறிக்கைகள் போன்ற பாடத்துடன் தொடர்புடைய அறிக்கைகளைப் பார்வையிடுவது மிகவும் குறைவாக இருந்திருக்கிறது என்பதை பரீட்சார்த்திகள் இதற்கு விடையாக விடை இல. (2) மற்றும் (3) இனைத் தெரிவுசெய்ததிலிருந்து தெரியவருகிறது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே விடை இல. (4) இல் தரப்பட்ட சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.11 - 1.15** இவ்வினாக்களுக்கான விடைகளாக தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா தவறானதா என்பதைக் குறிப்பிடும்படி கூறப்பட்டது. இந்த வினாக்களுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தபோதிலும் வினா இல. 1.12 மற்றும் 1.14 ஆகியவற்றுக்கு பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தவறான விடைகளை வழங்கியிருந்தனர். எல்லைக் கிரயம் தொடர்பான வினா இல. 1.12 இற்கு, பாடம் சம்பந்தமான கோட்பாட்டு ரீதியான அறிவின்மையால் பரீட்சார்த்திகள் ''சரியானது'' என எழுதித் தவறான விடையினை வழங்கியிருந்த அதே வேளை எல்லைக் கிரயம் மற்றும் எல்லை வருமானம் தொடர்பாக வினா இல. 1.14 இல் தரப்பட்டிருந்த கூற்று ''தவறானது'' எனக் குறிப்பிட்டதன் மூலம் பிழையான விடையினைக் குறிப்பிட்டிருந்தனர். இது கிரயக் கோட்பாடு மற்றும் பாடப்புத்தகத்தைப் படித்தல் என்பன குறைவாக இருப்பதையே சுட்டுகிறது.

**1.16 - 1.20** தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யுமாறு கோரப்பட்டது. வினா இலக்கங்கள் 1.16, 1.17 மற்றும் 1.20 ஆகியவற்றிற்கு பரீட்சார்த்திகளால் சரியான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. இந்த வினாக்களில் சந்தைப் பொருட்கள், கிரயக் கோட்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவை தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. அறிவு மற்றும் புரிந்துணர்வு குறைவாக இருப்பதன் காரணமாக சில பரீட்சார்த்திகளால் 1.18 மற்றும் 1.19 ஆகியவற்றுக்கு புள்ளிகளைப் பெற முடியவில்லை.

வினா இல. 1.18 தொடர்பில், பண்டம் ஒன்றின் சமநிலை விலைக்கும் வழங்குநர் விற்பனைக்காகத் தயாரித்த விலைக்குமிடையேயான வேறுபாடு என்பது உற்பத்தியாளர் மிகை எனக் கருதப்படுகின்ற போதிலும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் அதனை நுகர்வோர் மிகை எனப் பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காகத் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில, 2016 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதத்தினை கணிப்பிடுமாறு வினா இல. 1.19 இல் கேட்கப் பட்டிருந்தது. இதற்கான சரியான விடை 4% ஆக இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் அதற்குப் பதிலாக 2% இனைத் தெரிவுசெய்திருந்தனர்.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதியானது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 வினாக்களைக் கொண்டுள்ளது.

**வினா இல. 02** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

(a) இவ்வினா உற்பத்திக் காரணிகள் (பொருளாதார வளங்கள்) பற்றிய அறிவைப் பரீட்சிக்கின்ற வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் உற்பத்திக் காரணிகள் நான்கினைச் சரியாக விபரித்து அதற்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். உற்பத்திக் காரணிகளை மாத்திரம் குறிப்பிட்டிருந்த னராயினும் அதனை விபரிக்காத பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகளால் பிரதான விடயங்களைச் சரியானவாறு விபரிக்கத் தெரியவில்லை.

(b) இங்கு தரப்பட்டிருந்த எண்பெறுமானங்களைப் பயன்படுத்தி கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் இரண்டினையும் சரியாகத் தீர்த்திருந்ததன் மூலம் சமநிலை விலை ரூ. 30 எனவும் சமநிலைக் கணியம் 40 அலகுகள் எனவும் கணிக்கப்பட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகளால் சமன்பாடுகளைத் தீர்த்து சமநிலை விலையினைப் பெற முடியாமலும் சமநிலை விலையைப் பிரதியீடு செய்வதன் மூலம் சமநிலைக் கணியத்தைப் பெற முடியாமலும் காணப்பட்டது. இது ஒரு இலகுவான மற்றும் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடிய ஒரு வினாவாகும்.

**வினா இல. 03** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

(a) இவ்வினாவில் ''குறைந்துசெல்லும் எல்லைப் பயன் விதி'' என்பதால் கருதப்படுவது யாது என்பதை உதாரணம் ஒன்றுடன் விபரிக்குமாறு கேட்கப்பட்டது. நுகர்வோர் நடத்தை மீதான பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற வினா கேட்கப்படுகின்ற போதிலும் பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியதில்லை. இவ்வினாவை பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக்கொள்வர் எனின், இதற்கு இலகுவாக விடையளித்திருக்க முடியும். குறைந்தளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே குறைந்து செல்லும் வீதத்தின் மூலம் மொத்தப் பயன் அதிகரிக்கும்போது எல்லைப் பயன் ஆனது குறைந்துசென்றாலும்கூட எல்லைப் பயன் நேரானதாகவே இருக்கிறது என்பதைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் குறைந்துசெல்லும் எல்லைப் பயனிற்கான உதாரணங்களை வழங்குவதற்குத் தவறியிருந்தனர்.

(b) இது பரீட்சார்த்திகளால் இலகுவாக விடையளிக்கப்படக்கூடிய ஒரு வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் கேள்வியைத் தீர்மானிப்பவைகளைச் சரியாக வழங்கி, இதற்கான 4 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒரு சிலர் 3 அல்லது 2 தீர்மான விடயங்களையே வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கேள்வியைப் பாதிக்கும் காரணிகளை எழுதுவதற்குப் பதிலாக உற்பத்திக் காரணிகள் மற்றும் உற்பத்தியாளர் எதிர்பார்ப்புகள் மீது செலவழிக்கக்கூடிய கிரயம் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 04** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

(a) இதன் கீழ், அரசாங்கப் பாதீட்டின் பிரதான பண்பியல்புகள் பரீட்சிக்கப்பட்டன. பல பரீட்சார்த்திகள் செலவின வகைகள் பற்றியும் பாதீடு தங்கியிருக்கின்ற வரிகள் பற்றியும் மாத்திரமே எழுதியிருந்தனர். விடயங்கள் பற்றிய அவர்களது முன்வைப்பு அவர்களிடம் சரியான விளக்கம் காணப்படவில்லை என்பதைக் காட்டுவதுடன், பாதீடானது, பாதீடொன்றின் குறைபாடுகள் பற்றிய விடயங்களையும் முன்னைய வருடத்துடன் தொடர்புடைய பாதீடு பற்றிய விடயங்களையும் முன்வைக்க வேண்டும் என்பது போன்ற பிழையான விடயங்களைக் குறிப்பிட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அவர்களிடம் எதிர்கால வருடமொன்றிற்காக பாதீட்டினைத் தயாரிப்பது பற்றிய விளக்கம் காணப்படவில்லை.

வேறு சில பரீட்சார்த்திகள், இது, இவ்வாண்டிற்கான நிதிக் கொள்கையினதும் வட்டி வீதம் மற்றும் செலவுகள் கணிப்பீடுகள் பற்றியதுமான ஒரு ஆவணம் என்றவாறு பிழையான விபரிப்புகளை எழுதியிருந்தனர். கிட்டத்தட்ட அரைவாசிப்பேரால் மாத்திரமே இதற்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

(b) பண்டமொன்றிற்கு அலகு வரி ஒன்று விதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை விபரிக்குமாறு கேட்கப்பட்ட இவ்வினாவுக்கான பெரும்பாலான விடைகள் வெற்றிகரமாக அமைந்திருக்கவில்லை. பல பரீட்சார்த்திகள் பிரதான விடயங்கள் அல்லாத வரி விதிக்கப்பட்டதன் பின்னரான பொருளாதாரம் ஒன்றின் கேள்வி குறைவடைதல், விலைகள் அதிகரித்தல், அரசாங்க வரி வருமானத்தின் அதிகரிப்பு போன்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். வரி விதிக்கப்பட்டதன் பின்னர் ஏற்படும் பிரதான விளைவான நிரம்பல் வளையி இடப்பக்கம் நகருதல் என்பதைத் தங்களது விடைகளில் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே குறிப்பிட்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் வரைபைக் கீறி சரியாகப் பெயரிட்டிருந்தனர் ஆயினும் அதனைச் சரியானவாறு விபரித்திருக்கவில்லை. வேறு சில பரீட்சார்த்திகள் வரிகளை வகைப்படுத்தி வரிகளின் நகர்வுகள் பற்றி எழுதியிருந்தனர் ஆயினும் வரியொன்று விதிக்கப்படுவதன் விளைவுகளை விபரித்திருக்கவில்லை. அதிகளவு பரீட்சார்த்திகளால் சரியான விடைகளை அளிக்க முடியாதிருந்த ஒரு வினாவாக இதனைக் கருதிக்கொள்ள முடியும். பரீட்சார்த்திகளின் புரிந்துணர்வு மிகக் குறைவாக இருந்ததுடன் மிகச் சிலரால் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெறமுடிந்திருந்தது.

**வினா இல. 05** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

(a) இவ்வினா சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படை எண்ணக்கருக்களுடன் தொடர்புடையது. இதில் ஒப்பீட்டு நயம் மற்றும் முழு நயம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினாவுக்குக் குறைந்தளவுப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளே அதிகமாக இருந்தனர். இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகளின் விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் ஒப்பீட்டு நயத்தையும் முழு நயத்தையும் குழப்பியடித்து விடைகளை எழுதியிருந்தனர்.

ஒரு குறிப்பிட்ட நாடு குறித்தவொரு பண்டத்தை உற்பத்தி செய்கையில் ஒப்பீட்டு நயத்தினைக் கொண்டிருக்கிறதா என்பதை, மற்றைய நாட்டைவிட குறைவான சந்தர்ப்பச் செலவில் பண்டமொன்றை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்கான அதன் ஆற்றலினால் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்னும் சரியான விடையினை ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே வழங்கியிருந்தனர். வேறு எந்தவொரு நாட்டினாலும் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகளின் அலகு ஒன்றிற்கான கிரயத்தினை விடவும் குறைந்த கிரயத்தில் பண்டமொன்றை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்கான ஒரு நாட்டின் ஆற்றலே முழு நயம் என்பதை பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(b) சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் மூன்றினை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்த இந்த வினாவுக்கு குறைந்தளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் 2 தொடக்கம் 4 வரையான புள்ளிகளையே பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் நாட்டினுள் போதைப்பொருட்களைக் கொண்டுவருதல், தொழிற்றுறையைப் பாதுகாப்பதற்கான ஆற்றலின்மை, இறக்குமதியின் மூலம் பணத்தின் வெளிப்பாய்வு போன்ற பொதுவான விடயங்களை எழுதியிருந்தனர். ஆயினும், அவர்களால் தீங்குபயக்கும் பொருட்களின் இறக்குமதி, அதிகளவான விவரணங்கள் (specifications), நாடுகளுக்கிடையிலான போட்டி அதிகரித்தல், உள்நாட்டுத் தொழிற்றுறை சரிவடைதல் போன்ற குறிப்பான விடயங்களை எழுத முடியவில்லை. ஏனெனின் அந்த விடயங்கள் தொடர்பில் அவர்களிடம் சரியான விளக்கம் காணப்படவில்லை.

## பகுதி C

**வினா இல. 06** – 20 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

(A) இது தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய வினாவாக இருந்தது. இங்கு தேசிய கணக்குகளுடன் தொடர்புடையதாகத் தரப்பட்ட அனுமானத் தகவல்களைப் பயன்படுத்தி தரப்பட்ட ஒரு வருட காலத்திற்கான கணித்தல்களைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டது.

(a) மொத்த உள்நாட்டுச் செலவு கணிப்பிடப்பட வேண்டியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரவுகளின் ஒரு பகுதியை மாத்திரம் பயன்படுத்திய காரணத்தால் மொத்தப் புள்ளிகளையும் இழக்க வேண்டியேற்பட்ட அதேவேளை சிலர் கூட்டல் பிழைகள் போன்ற கணித வழுக்கள் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர். குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் மொத்த உள்நாட்டுச் செலவுக் கணிப்பீட்டில் மொத்த உள்நாட்டு மூலதனத் திரட்சியினைப் புறக்கணித்திருந்தனர்.

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தியை சந்தை விலையில் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் நிகர ஏற்றுமதிகளை செம்மையாக்கம் செய்யத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியிருந்த சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்களை குழப்பியடித் திருந்தனர்.

(c) இங்கு மொத்தத் தேசிய உற்பத்தியை சந்தை விலையில் கணிப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப் பட்டது. இப்பகுதிக்கான சில பரீட்சார்த்திகளின் விடைகள் தவறாகக் காணப்பட்டன. ஏனெனில் வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானத்தை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் கூட்டுவதற்குப் பதிலாக அவர்கள் அதனைக் கழித்திருந்தனர்.

(d) சந்தை விலையிலான நிகர தேசிய உற்பத்தியானது மூலதனத் தேய்மானத்தைக் கழிப்பதன் மூலம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனைக் கூட்டியிருந்தனர். இதன் விளைவாக விடைகள் பிழைத்திருந்தன. எவ்வாறாயினும், அதிகமான பரீட்சார்த்திகள் அதனைச் சரியாகச் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

(a), (b), (c), (d) என்ற சகல 4 பகுதிகளுக்கும் சரியான செம்மையாக்கங்களுடன்கூடிய சரியான விடைகளைப் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் காணப்பட்ட அதே வேளை ஏனையோர் இவ்வகையான வினாக்களைத் தீர்ப்பதில் அனுபவமின்மையை வெளிப்படுத்தியமையே திருப்தியற்ற விடைகள் அளிக்கப்பட்டமைக்கான காரணமாக இருந்தது. சில பரீட்சார்த்திகளிடம் தேசிய செலவுடன் தொடர்புடைய $E = C+I+G+(X-M)$ எனும் சமன்பாடு தொடர்பில் சரியாக புரிந்துணர்வு காணப்படவில்லை. ஒழுங்குமுறையில் படிப்படியாக தரவுகளை செம்மையாக்கம் செய்ததன் மூலம் முழுப் 10 புள்ளிகளையும் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். சரியான முறையில் பாட விடயங்களை நுணுகிப் பார்க்கும் பரீட்சார்த்திகளால் அதிக நேரத்தைச் செலவிடாமல் இலகுவாகப் புள்ளிகளைப் பெறக்கூடிய ஒரு வினாவாக இது இருந்தது.

(B) இங்கு இறைக் கொள்கைக் கருவிகளுக்கான ஓர் உதாரணத்துடன் இறைக் கொள்கை என்பதாற் கருதப்படுவது யாது என விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. சரியான விளக்கம் இன்மையால் அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கொள்கையையும் இறைக் கொள்கையையும் போட்டுக் குழப்பியடித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் ஈட்டியிருந்தனர்.

(C) (a) இங்கு கேள்வித் தூண்டல் பணவீக்கம் பற்றிப் பரீட்சித்திருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு திருப்திகரமான பதில்களை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கூற்றில் கூறப்பட்ட செலவு உதைப்பு பணவீக்கம் பற்றியும் குறிப்பிட்டிருந்தனர். இது, வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

(b) பணவீக்கத்தைக் குறைப்பதற்காக ஒரு நாட்டினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சரியான விடைகளைச் சில பரீட்சார்த்திகள் வழங்கியிருக்கவில்லை. அதிக நேர் வரிகளை கொண்டிருப்பது, விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளின் அரசாங்கச் செலவு அமுலாக்கத்தைக் குறைப்பது, உற்பத்திக்கான உதவிகளை வழங்குவது போன்ற விடயங்கள் மிக அரிதாகவே வெற்றிகரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் உற்பத்தி வரி ஒன்றை விதித்தல், பண விநியோகத்தை அதிகரித்தல் போன்ற தவறான விடைகளை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகளின் பாடம் சம்பந்தமான புரிந்துணர்வு மட்டம் மிகவும் கீழ்நிலையில் இருந்ததை அவர்கள் வழங்கிய விடைகளிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது.

- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. விசேடமாகச் சுய கற்றல் புத்தகங்கள், புத்தகங்கள், கையேடுகள், ஆவணங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.

5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.

6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காணப்தற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.

7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர்புடை யவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.

12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப் பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -